விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 071 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 16 புதன்கிழமை (28.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

யாழிலிருந்து வெளிமாவட்டங்களுக்கான

## தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறாது

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம்



(யாழ்ப்பாணம்)

முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாததால் இன்றுமுதல் யாழிலிருந்து வெளிமாவட்டங்களுக்கான தனியார் போக்குவரத்து சேவை 15

பல்வேறு கோரிக்கையை முன்வைத்து

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்று மற்றும் நாளை இரண்டு நாள் வேலைநிறுத்த போராட்டம் இடம்பெறவுள்ள நிலையில் இன்று யாழ்.பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமும் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக் 16

## சகோதரர்களுக்கு இடையே மோதல்

இருவருக்கு கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் சகோதரியும், சகோதரன் ஒருவரும் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனு 15

# மக்களின் குரல்கள் மதிக்கப்பட வேண்டும்

அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர்

(கொழும்பு)

இலங்கை மக்களின் குரல்கள் மதிக்கப்பட வேண்டும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மா தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



நுணாவிலில்

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் நுணாவில் பகுதியைச் சேர்ந்த 55 வயதான குடும்பஸ்தர் 15

வட்டுக்கோட்டை தெற்கில்

## விபரீத முடிவெடுத்த ஆசிரியர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெற்குப் பகுதியில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதில் வட்டு தெற்கு நாவலடி வீதியைச் சேர்ந்த செல்வரதி விதிதரன் 02

செப்ரெம்பர் 18 - ஒக்ரோபர் 18

## இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி மற்றும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 15

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன்

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன



(கொழும்பு)

தனக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் 02

## எரிபொருள் சூத்திரத்துக்கு எதிர்காலத்தில் நிவாரணம்

எரிசக்தி அமைச்சர்



(கொழும்பு)

எரிபொருள் விலைச்சூத்திரத்திற்கு எதிர்காலத்தில் நிவாரணம் வழங்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை...

கண்டவாறு கூறியுள்ளார்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் பிரகாரம் எந்தவொரு உறுப்பினருக்கும் இவ்வாறான பிரேரணையை முன்வைக்க உரிமை உண்டு எனவும் அந்த உரிமையை தாம் மதிப்பதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

பிரேரணைக்கு முகங்கொடுக்கவுள்ளதாக தெரிவித்த மகிந்த யாப்பா அபேவர்த்தன, நம்பிக்கையில்லா பிரேரணையை மிகவிரைவில் விவாதிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வீதி பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட போது சபாநாயகர் அரசியலமைப்பை மீறியதாக குற்றம் சுமத்தி ஐக்கிய மக்கள் சக்தி கட்சி இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## விபரீத...

(வயது 59) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் 2016ஆம்ஆண்டு ஏற்கனவே ஒரு தடவை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர் என்றும், அதற்கு பின்னர் மன அழுத்தத்தில் காணப்பட்டுள்ளார் என்றும்தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (ம-7,33)

## சுமந்திரன் எம்.பியின் தாயார் கொழும்பில் காலமானார்



(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் தாயார் காலமானார்.

கொழும்பு - தெஹிவளையில் அமைந்துள்ள தனது மகளின் இல்லத்தில் நேற்று (27.02.2024) மதியம் 1.30 மணியளவில் சுமந்திரனின் தாயாரான புஷ்பராணி மதியாபரணன் (வயது-85) காலமானார்

முதுகுத்தண்டு சத்திர சிகிச்சையின் பின்னர் கடந்த இரண்டு வருட காலமாக சுகயீனமாக இருந்த அவர், நேற்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. (ம-7)

## மக்களின்...

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளரை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பேட்டிகண்டார்.

இலங்கை இந்தோபசுபிக்கின் இதயத்தில் உள்ளது இந்த பிராந்தியத்தின் - உங்கள் விஜயம் பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்-** இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உறவு,

நீங்கள் தெரிவித்தது போல இந்து சமுத்திரத்திற்கும், எங்களின் கடல்நடமாட்ட சுதந்திரத்தை உறுதிசெய்வதற்கும் வர்த்தகம் கடற்பயணம் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகளை உறுதி செய்வதற்கும் இலங்கையுடனான இந்த கூட்டுபங்காண்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

எங்கள் இருநாடுகளிற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்காக நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு நன்றி.

நான் இங்குவந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் எதிர்காலத்திற்கான ஆற்றல் வளத்தையும் பார்வையிடமுடிந்ததுகுறித்து நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

ஜூலி - இந்த வருடம் அமெரிக்காவில் தேர்தல்கள் இடம்பெறவுள்ளன - இலங்கையிலும் தேர்தல்கள் இடம்பெறவுள்ளன வளரும் ஜனநாயகம் என்பது பல விடயங்களை அடிப்படையாக கொண்டுள்ளது உங்கள் கருத்து என்ன?

பதில்- ஜனநாயகம் என்பது கூச்சல் மிகுந்ததாகயிருக்கலாம், ஓரளவு அசுத்தமானதாகயிருக்கலாம் ஆனால் இறுதியில் என்ன முக்கியம் என்றால் மக்களின் குரல்கள் செவிமடுக்கப்பட வேண்டும், மக்களின் குரல்கள் மதிக்கப்படவேண்டும், அனைத்து மக்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற ஜனநாயகம் காணப்பட வேண்டும்

இதன் அர்த்தம் என்னவென்றால் சிவில் சமூகத்தினடமிருந்து செவிமடுக்க வேண்டும் வர்த்தக சமூகத்தினரை செவிமடுக்கவேண்டும், கல்விமான்கள் கருத்துக்களை கொண்டுள்ள தனிநபர்கள் என அனைவரினதும் கருத்துக்களை செவிமடுக்கவேண்டும்.

அமெரிக்காவில் இது இடம்பெறும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கையில் உயிர்த்துடிப்புள்ள சிவில் சமூகம் உள்ளது அவர்களின் குரல்களை செவிமடுக்கவேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம் என்று பதிவிடப்பட்டுள்ளது. (ம-7)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு மாதங்களில் 83 கொலைச் சம்பவங்கள்

## கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

**இவ்வருடத்தின் இரு மாதகாலப்பகுதிக்குள் 83 கொலைச்சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் இவ்வருடம் இரு மாதகாலப்பகுதிக்குள் 83 கொலைச்சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 1,180 திருட்டு சம்பவங்களும் 310 கொள்ளைச்சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் அந்த காலப்பகுதிக்குள் 20 துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின. அவற்றில் 10 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் பாதாள உலக குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் தற்போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)



## பாராளுமன்ற உறுப்பினர் உத்திக ராஜினாமா



(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அதன்படி பாராளுமன்ற உறுப்பினர் தனது இராஜினாமா கடிதத்தை நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக உத்திக பிரேமரத்ன, 2020 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## காசா சிறுவர்களுக்கு 1 மில். டொலர்

(கொழும்பு)

காசாவில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1 மில்லியன் டொலரை திரட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்காக காசாவில் உள்ள குழந்தைகளுக்கான நிதியத்தை உருவாக்கும் ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொண்டாட்டங்களைத் தவிர்த்துவிட்டு இதற்கு பங்களிக்குமாறும் அமைச்சுக்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பொது மக்களும் காசாவில் உள்ள குழந்தைகளுக்கான நிதியத்திற்கு தமது பங்களிப்புக்களை வழங்க முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (நி-5-6)

## 2000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

புதிதாக 2000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ப்ரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் அரச நிர்வாக அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படாமையினால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. பணிபுரிந்த சிலர் ஓய்வு பெற்றுள்ளமையினாலும் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## வெப்பமான காலநிலை அடுத்த மாதம் வரை நீடிக்கும்

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல மாவட்டங்களில் நிலவும் கடும் வெப்பமான காலநிலை அடுத்த மாத நடுப்பகுதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலைமையினால் சில பகுதிகளில் உள்ள நீரோடைகள் மற்றும் கிணறுகளின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்து மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குருநாகலில் நேற்று அதிகூடிய வெப்ப நிலையாக 35.5 பாகை செல்சியஸ் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம்

## 3 ஆவது தகுதிகாண் போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் வெற்றி






சிறந்த வீரர் சண்சயன்

விக்கிரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணம் 3 ஆவது தகுதிகான் போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணி ஜொலிஸ்ரார் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஒவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஓட்டங்களை பெற்றது. கோபிராம்- 58, சந்தோஸ்-30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். ஜொனியன்ஸ் அணியை சார்ந்த சண்சயன் 25 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும், சஜீதனன் 18 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கானாமிர்தன் 22 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 28 ஓவர்களில் 6இலக்குகளை இழ்ந்து 135 ஓ்டங்களை பெற்றனர். சௌமியன்-36, ரட்ணம்-32, சன்சயன்-15 ஓட்டங் களை பெற்றனர். பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் அணியை சார்ந்த சாருஜன் 20 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினார். இப் போட்டியில் சிறந்த வீரராக யாழ்.ஜொனியன்ஸ் அணியை சார்ந்த சண்சயன் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# முல்லை மாவட்ட அணியை வீழ்த்தியது கிளிநொச்சி உதைபந்தாட்ட சம்மேளனம்



யாழில் பதினொரு பேர் கொண்ட COMMANDERS CUP -2024 Friendship challenge Trophy Football Tournament போட்டியின் அரையிறுதி போட்டியா னது கடந்த சனிக்கிழமை (24) யாழ். துரையப்பா விளையாட்டு மைதா னத்தில் இடம்பெற்றது.

கஸ்துல் தலைமையிலான முல்லை மாவட்ட உதை பந்தாட்ட சம்மேளன அணியை எதிர்த்து தனுசன் தலை மையிலான கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன அணி போட்டியிட்டது.

விறுவிறுப்பாக இடம் பெற்ற முதல் பாதியாட்டத்தில் முல்லை மாவட்ட சம்மேளன அணிக்கு கிடைத்த தண்ட உதையை அவ் அணி தலை வர் கஸ்துல் கோலாக பதிவு செய்தார்.

இடைவேளைக்காக ஆட்டம் நிறுத் தப்பட்ட வேளை 1:0 என்ற கோல் அடிப்படையில் முல்லை அணி முன் னிலை வகித்தது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண் டாவது பாதியாட்ட த்தில் கிளிநொச்சி சார்பாக எட்வின் ஒரு கோலை பெற்று கொடுக்க இரண்டு அணிக ளும் வெற்றிக்காக தங்களது திறமைகளை சிறப்பாக வெளி க்காட்டியிருந்தனர். இருந்த போதும் இரு அணிகளும் தலா ஒரு கோல்களை பெற்று 1:1 என்ற கோல்கணக்கில் சமநிலை வகித்தது.

தொடர்ந்து இடம்பெற்ற சமநிலை தவிர்ப்பில் 3:1 என்ற கோல் அடிப் படையில் கிளிநொர்ச்சி உதைபந்தாட்ட சம்மேளன அணி வெற்றியை தமதாக்கியது. (நி-5-6-299)

# தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டி

## வவு.பெரிய கோமரசன்குள ம.வி.சாதனை

தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலய மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

.காலி போத்திவெல தேசிய பாடசாலையில் நடைபெற்ற இளையோர், கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவினர்களுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டியானது கடந்த 23,24,25 ஆகிய தினங்களில் இடம்பெற்றது. இந் நிலையில் குறித்த போட்டியில் வவுனியா பெரிய கோமரசன் குளம் மகாவித்தியாலய மாணவிகள் இருவர் தங்கப்பதக்கமும், ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் ஒரு வெண்கல பதக்கத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணி பிரச்சினைகள் தொடர்பில் நடமாடும் சேவை

(தருமபுரம்)

ஜனாதிபதி செயலகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் காணிப்பிரச்சினைகள் தொடர்பிலான திணைக்களங்களுக் கான நடமாடும் சேவை நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நடமாடும் சேவையில் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி, காணி ஆணையாளர், நீர்ப்பாசனம், வனவள ஜீவராசிகள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட இருபதிற்கு மேற்பட்ட திணைக்களங்கள் பங்குபற்றி இருந்தன.

பிரதேச செயலகங்களில் மக்கள் முன்வைத்த காணிப் பிரச்சினைகளில் தீர்வு வழங்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் பிரதேச செயலாளர்கள் எடுத்து கூறியிருந்தனர். கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற யாழ்., கிளி.மாவட்ட விசேட குழுக்கூட்டத்தில் அப்பிரதேசங்களில் உள்ள காணிகள் பற்றிவிசேட கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-316)

# சிறுவன் மீது தாக்குதல்

(கண்டாவளை)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் தோட்டத்துக்குள் ஆடு சென்று பயிர்களை அழித்ததாக தெரிவித்து தோட்டத்தின் உரிமையாளரால் அயல் வீட்டில் வசிக்கும் 14 வயது சிறுவனை தோட்டத்துக்குள் அழைத்துச் சென்று கடுமையாக தாக்கப்பட்டு உள்ளார் குறித்த சம்பவமானது கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) மாலை இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சிறுவன் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-5-6-315)

# கால்நடைகளுக்கு மீண்டும் பெரியம்மை நோய் பரவல்

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் கால் நடைகளுக்கு பெரியம்மை நோய் பரவ ஆரம் பித்துள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.**



கிளிநொச்சி கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு தருமபுரம் பகுதியில் இவற்றின்தாக்கத் தினை அவதானிக்க முடிகிறது. வைரஸ் நோயான இந்த நோய் வெப்பமான கால நிலையின் போதே கால்நடைகளுக்கு பரவும்.

கடந்த வருடமும் குறித்த நோயின் தாக்கமானது வடமாகாணம் மற்றும் தென் மாகாணங்களிலும் அதிகரித்திருந்தது.

இந்த நோய்க்குட்பட்ட கால் நடைகளுக்கு உணவில் நாட்டமின்மை, எழும்பி நடக்க முடியாத நிலை, கொப்பளங்கள் உருவாகி பெரிய காயங்கள் ஏற்படுதல் போன்ற அறிகுறிகள் காணப்படும். கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கஜரஞ்சனிடம் கேட்டபோது குறித்த நோய்க்கான தடுப்பூசியை பதிவு செய்து கால்நடை வளர்ப்பாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் பணம் செலுத்த வேண்டிய தேவையுள்ளதால் பண்ணையாளர்கள் பதிவு செய்து பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்ட வில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6-316)

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்

(எழுத்தாளர், கவிஞர், ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்- கல்வித் திணைக்களம்)

தோற்றம்: 08.11.1947

மறைவு:-12.03.2012

அன்பின் இருப்பிடமாய்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
இலக்கியத்தை போதித்த ஆசானாய்
இருந்து எம்மை வளர்த்த அப்பாவே
நீங்கள் மறைந்து பன்னிரெண்டு ஆண்டுகள்
ஆகிவிட்டபோதும் உங்கள் அறிவுரைகள்
காதிலே கேட்கிறது.

(19295)

கொற்றன்தறை. பொலிகண்டி கிழக்கு. வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 380 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 380 ஊழியர்களுக்கான வெற்றி டங்கள் காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக தமது சேவைகளை முன்னெடுத்துச் செல்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர் பற்றாக்குறை தொடர்பில் நிதி அமைச் சுக்கு அறிவித்துள்ளதாக குறித்த அதிகாரி தெரிவித்தார்.

உதவி ஆணையாளர்கள் 221 பேருக்கும் அலுவலக உதவியாளர்கள் 71 பேருக்கும் முகாமைத்துவ ஊழியர்கள் 88 பேருக்கும் வெற்றிடங்கள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இராசிபலன்

28.02.2024
மாசி 16, புதன்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 2.19 மணிவரை

சித்திரை முழுவதும்
சுபநேரம் 4.58-6.28 மணிவரை
இராகுகாலம் 12.28-1.58 மணிவரை

சங்கடஹர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்: பூரட்டாதி

வளவன்


மேஷம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், போசன நன்மையுண்டு.


ரிஷபம்

எதிர்கால நலன் கருதி முக்கிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.


மிதுனம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.


சிம்மம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு, வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.


கன்னி

பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தினரின் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.


துலாம்

உறவினர்கள் உதவி செய்ய முன்வரலாம், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் வந்து சேரலாம், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.


விருச்சிகம்

பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

உறவினர்கள் உங்கள் மனம்போல் நடந்து கொள்வர், புத்தி சாதூரியமான செயற்பாடுகளால் பெருமையடைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மகரம்

புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பகையொன்று நட்பாகலாம், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.


கும்பம்

பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.


மீனம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், புத்தி சாதூரியமாக நடந்து சாதனை படைப்பீர்கள்.

பரிசுத்தமான மனசாட்சி [illegible]தோடும் அமைதியோடும் இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம், MSR'S EAST EAGLE SMASHERS(UK) குழுவின் அனுசரணையுடன் நடத்திய மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட ஆயர்.கலாநிதி.ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜாவும் கலந்து கொண்டனர். (நி-5-6)

# விசர்நாய் கடிக்கு இலக்கானால்

## விரைவாக சிகிச்சையை பெற்றுக்கொள்ளுங்கள்

(யாழ்ப்பாணம்)

சில தினங்களுக்கு முன்னர் நாய்க்கடிக்கு உள்ளாகி இயலாமைக்குள்ளான இளைஞன் ஒருவர் அச்சுவேலி பிரதேச மருத்துவமனை சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் விசர்நாய் கடித்தே இளைஞன் உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது

இந்நிலையில் குறித்த இளைஞனை கடித்த விசர் நாய் வேறுயாரையும் கடித்திருக்கலாம் என கருதப்படுவதால் அப்பகுதியில் அண்மையில் நாய்க்கடிக்கு உள்ளானோர் மற்றும் உயிரிழந்த இளைஞனுடன் பழகியவர்கள் மருத்துவமனையை நாடுவது சிறந்தது என அச்சுவேலி பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி தெரிவித்தார். (நி-5-6)

# யாழ்.இந்திய துணைத்தூதராக பதவியேற்ற சாய் முரளி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதராக சாய்முரளி நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

2021 ஆம் ஆண்டு முதல் இதுவரை யாழ். இந்திய துணைத் தூதராக செயற்பட்ட ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் டில்லிக்கு அழைக்கப்பட்ட நிலையில் இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டது.

சாய் முரளி இதற்கு முன்னர் ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக்கில் துணைத் தூதராகப் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)



# போக்குவரத்து நெரிசலை குறைப்பது தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடியை குறைக்கும் முகமாக துறைசார் தரப்பினருடன் நேற்று செவ்வாய்க்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

யாழில் உள்ள தனது கட்சி அலுவலகத்திற்கு மாநகரசபையினர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, போக்குவரத்து சபை அதிகாரிகள் உள்ளிட்டவர்களை அழைத்து நகரப்பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசல்களை குறைப்பது தொடர்பில் கலந்துரையாடினார்.

யாழ்.நகர் பகுதியில் மருத்துவமனை வீதி, மின்சார நிலைய வீதி மற்றும் ஸ்ரான்லி வீதி உள்ளிட்ட வீதிகளில் இரு மருங்கிலும் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களால் வீதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றன. இது தொடர்பில் நீண்ட காலமாக சுட்டிக்காட்டப்பட்டு வரும் நிலையில், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# மாற்றுத்திறனாளிகள் சங்கம் முன்னெடுக்கவுள்ள போட்டிகள்

(சாவகச்சேரி)

யாழ். மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வு சங்கத்தின் 34 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு இடையே அவர்களது திறன்களை ஊக்குவிக்கும் முகமாக கலை, கலாசார மற்றும் விளையாட்டு போட்டிகளை முன்னெடுக்கவுள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் மருத்துவர் சிவபாதமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் சக்கர நாற்காலி ஓட்டம், மூன்று சில்லு உந்துருளி ஓட்டம், சக்கர நாற்காலி பந்து போடுதல், பழம் பொறுக்குதல், நீர் நிரப்புதல், சமநிலை யோட்டம், சாக்கோட்டம், கயிறு அடித்தல், பார்வையற்றவர்களுக்கான 50 மீற்றர் ஓட்டம், சித்திரப் போட்டி, மாலை கட்டுதல், கோலம் போடுதல், கதிரை பின்னுதல், தையல், பாட்டு , பேச்சு, நடனம், விளக்கீற்று அடித்தல், கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கிலுள்ள போட்டிகள் யாவும் கீழ் பிரிவு மேற்பிரிவு என இரு பிரிவுகளாக மற்றும் ஆண்- பெண் பிரிவு அடிப்படையில் நடத்தப்படும். போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி மார்ச் 3 ஆம் திகதியாகும். மேலும் இப்போட்டிகளுக்கு வயதெல்லை குறிப்பிடப்படவில்லை.எனவே குறித்த போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் arodinjaffna@Gmail.com எனும் மின்னஞ்சலின் ஊடாகவும் யாழில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வு சங்கத்தின் அலுவலகத்தில் நேரடியாகவும் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக தகவல்களை பெற 021 221 5925 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ள முடியும். (நி-5-6-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 170 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 140 | 150 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 450 | 430 | 800 |
| தக்காளி | 450 | 400 | 500 | 500 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 150 | 130 | 150 |
| கோவா | 400 | 420 | 450 | 350 | 500 |
| கரட் | 600 | 500 | 600 | 500 | 600 |
| பூசணி | 200 | 260 | 220 | 170 | 300 |
| புடோல் | 200 | 160 | 170 | 165 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 300 | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 400 | 420 | 400 | 330 | 450 |
| பாகற்காய் | 350 | 400 | 450 | 310 | 400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 300 | 150 | 500 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 140 | 150 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 300 | 400 |
| லீக்ஸ் | 450 | 350 | 450 | 350 | 500 |
| பீற்றூட் | 350 | 300 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 650 | 500 | 400 | 700 |
| முருங்கைக்காய் | 2000 | 1800 | 1200 | 1450 | 1200 |
| போஞ்சி | 400 | 300 | 450 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | — | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 70 | 50 | 100 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 130 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 50-100 | 70-100 |
| இராசவள்ளி | 320 | 400 | 400 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 195 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 60 | 80 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விமானப் படையினர் விடுவிக்க வேண்டும்

## அங்கஜன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வடக்கில் விமானப்படையின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விமானப் படையினர் விடுவிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

விமான படையின் 73ஆவது ஆண்டு நிறைவு விழா இம்முறை வடக்கை மையப்படுத்தி நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு வடக்கில் விமான படையின் வசம் உள்ள தனியார் காணிகளை விடுவிக்க விமானப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கில் பாதுகாப்பு தேவைகளுக்கு என தேசிய பாதுகாப்பின் கீழ் காணிகளை சுவீகரித்து அதனை வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழுக்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார். அதன்போது , வலி வடக்கில் உள்ள காணிகள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகிறேன் என தெரிவித்தார். (நி-5-6-33)

# 'பரேட்' சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சுமையை குறைக்கும் நோக்கில் பரேட் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதை தற்காலிகமாக இடை நிறுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வங்கிகளும் நிதி நிறுவனங்களும் கடனைத் திருப்பிச் செலுத்தாத கடன் வாங்குபவர்களிடமிருந்து நிலத்தையும் சொத்துக்களையும் கைப்பற்ற பரேட் சட்டம் அனுமதிக்கிறது.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சுமையை குறைக்கவும் அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை எளி தாக்கும் வகையிலும் இந்த பரேட் சட்டம் டிசெம்பர் 15 ஆம் திகதிவரை தற்காலிக இடை நிறுத்தப்படவுள்ளது.

இதனை இடைநிறுத்தம் செய்வது தொடர்பான திருத்தங்களை பாராளுமன்றத்தின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (நி-5-6)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் மு.கதிர்காமலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க. பத்மகாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6-60)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய கொடியேற்றம் இன்று

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாலைதீவு அந்தோனியார் தவக்கால திருத்தலத் திருவிழாவானது இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து மார்ச் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணை விழாவும், 2 ஆம் திகதி சனிக்கிழமை திருவிழா நிறைவு பெறும். (நி-5-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:திருவோணம்
உயரம்: -5'5
தகைமை/தொழில்: Visual Communica tion Media
எதிர்பார்ப்பு: அழகான பெண்
தொ.இ: B/14001

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L வாகன சாரதி (Own)
எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண். வெளிநாடாயின் விவாகரத்தான பிள்ளைகள் அற்றவர்கள்.
தொ.இ: B/14002

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம் : திருவாதிரை
கி.பா: 32
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA Business
எதிர்பார்ப்பு : A/L படித்தவர். உத்தியோக முள்ளவர்.
தொ.இ: B/14003

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம் : கார்த்திகை
கி.பா: 1 1/2
உயரம்: 5'5"
தகைமை/ தொழில்: BSc (Maths), CIMA Bank officer
எதிர்பார்ப்பு: பட்டதாரி.அரச தொழில். (காரைநகர் மட்டும்)
தொ.இ: B/14005

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 59
உயரம்: 160cm
தகைமை/தொழில்:BA பட்டதாரி
எதிர்பார்ப்பு: வெளிநாடு (லண்டன்.பிரான்ஸ்)pr
தொ.இ: G/13996)

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: -
உயரம்: 164cm
தகைமை/தொழில்: BSC Maths, Global Investment Manager
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/13997

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 41
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.B.A பட்டதாரி
எதிர்பார்ப்பு: பொறியியலாளர்/உயர்பதவி
தொ.இ:G/13999

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 18
உயரம்: -5'4
தகைமை/தொழில்: BA Teacher (Australia)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. Engineers.
தொ.இ:G/14004

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 14.03.2024 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.03.2024 மற்றும் 16.03.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம். |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும் ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும் ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 021-222 2601** (சி-8423)

PEOPLE'S BANK
Pride of the Nation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### பதவியை இராஜினாமா செய்தார்
# பாலஸ்தீன பிரதமர்



(காசா)


பாலஸ்தீன பிரதமர் முகமட் சட்டேயே தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூட் அப்பாசிடம் பிரதமர் தனது இராஜினாமா கடிதத்தை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் காசா யுத்தத்தின் பின்னரான அரசியல் ஏற்பாடுகள் குறித்து பாலஸ்தீனியர்களிடையே கருத்து முரண்பாடு ஏற்படுவதை உறுதி செய்வதற்காக தான் பதவி விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இஸ்ரேலின் காசா யுத்தத்தின் பின் பாலஸ்தீன ஜனாதிபதி பாலஸ்தீன அதிகார சபையில் மாற்றங்களை மேற் கொள்ள வேண்டும் என அமெரிக்கா அழுத்தங் களை கொடுத்து வருகின்ற நிலையில் பிரதமரின் இராஜினாமா அறிவிப்பு வெளி யாகியுள்ளது. (நி-5-6)

# ட்ரம்ப் ரஷ்யாவை
# அமெரிக்கர்களுக்



## உக்ரைன் ஜ

(கீவ்)

### ரஷ்யாவை ஆதரிக்க ட்ரம்ப் உக்ரைனுக்கு மட்டுமல்ல, எதிரானவராக கருதப்படுவார் ஜெலன்ஸ்கி கருத்து தெரிவித்து

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

இரண்டு வருடங்களுக்கு மேலாக நடக்கும் இப்போரில் இதுவரை உக்ரைன் நாட்டு வீரர்கள் 31,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் பொய்யான தகவல்களை பரப்ப பில்லியன்களில் புடின் செலவு செய்து வருகிறார். தற்போது அவர் அந்த முயற்சியில் வெற்றி அடைந்து விட்டாரோ என தோன்றுகிறது.

ட்ரம்ப் புடின் பக்கம் நிற்பதை என்னால் புரிந்து


செ

ர
பே
ன
யா

### பாகிஸ்தானின் முதல் பெண் முதல்வராக
# மரியம் நவாஸ் பதவியேற்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சியின் மூத்த தலைவரான மரியம் நவாஸ் நேற்று முன்தினம் பஞ்சாப் மாகாண முதல் வராகப் பதிவியேற்றுள்ளார்.



இதன் மூலம் பாகிஸ்தானின் முதல் பெண் முதல்வர் என்ற பெருமை மரியம் நவாஸுக்கு கிட்டியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாகிஸ்தானில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியான பஞ்சாப் மாகாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள 327 தொகுதிகளில், மரியம் நவாஸ் தரப்பு பிஎம் எல்-என் கட்சி 137 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து 50 வயதான மரியம் நவாஸ் தனது தந்தையும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் மற்றும் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ள தனது சித்தப்பா ஷாபாஸ் ஷெரீப் ஆகியோரது முன் னிலையில் ஆளுநர் மாளி கையில் நடைபெற்ற பதவி யேற்பு நிகழ்ச்சியில் பஞ்சாப் முதல்வராகப் பதவியேற்றார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய மரியம் நவாஸ் தனது தந்தை அலங்கரித்த பதவியில் தான் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

பஞ்சாப் மாகாணத்தின் ஒவ்வொரு பெண்ணும் பெண் முதல்வரைப் பார்த்து பெருமிதம் கொள்வதாகவும், இதேபோல, பெண்கள் தலைமைப் பதவி யேற்கும் சூழல் எதிர்காலத்திலும் தொடரும் என்ற நம்பிக்கை வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர் எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன் என்றும் அவர் உறுதியளித்தார் (நி-5-6)

# நவால்னியின் மரணத்திற்கு
# குற்றம் சாட்டும் அவுஸ்

(கன்பரா)

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னியின் மரணத்துடன் தொடர்புடைய சிறை அதிகாரிகளுக்கு எதிராக அவுஸ்திரேலியா நிதி மற்றும் போக்குவரத்து தடைகளை விதித்துள்ளது.



அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் இதனை அறிவித்துள்ளார்.

அத்துடன் நவால்னியின் மரணம் குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரின் மனித உரிமைகளை மோசமாக மீறியவர்களை பொறுப்புக்கூறச் செய்வதை நோக்கிய அடுத்த கட்ட நடவடிக்கைகளாக அவுஸ்திரேலிய தடைகளை விதித்துள்ளதென அவர் தெரிவித்தார்.

அத்துடன் நவால்னியின் மரணத்திற்கு காரணமானவர்களும் ரஷ்ய அர சாங்கமும் பொறுப்புக்கூறுவதை உறுதிப்படுத்துவதற்காக அவுஸ்திரேலியா சக நாடுகளுடன் இணைந்து செயற்படும் எனவும் ரிச்சர்ட் மார்லஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நவால்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# வை ஆதரித்தால்
# க்கும் எதிரியாவார்

### ன் ஜனாதிபதி



ட்ரம்ப் முடிவெடுத்தால் அவர் ல்ல, அமெரிக்கர்களுக்கே வார் என உக்ரைன் ஜனாதிபதி வித்துள்ளார்.

போது யில் ரோ க்கம் ரிந்து

கொள்ள முடியவில்லை.

அமெரிக்க இராணுவம் ரஷ்ய இரராணுவத்துடன் போர் புரிந்ததில்லை. அதனால் அவரது உண்மையான நோக்கங்களை அமெரிக்கர்கள் புரிந்து கொள்ளவில்லை என தெரிவித்தார்.

நாங்கள் புடினை எதிர்த்து போரிட்டு வருகிறோம் எங்களுக்கு தெரியும்.

நாங்கள் இப்போரில் வெற்றி பெறுவது எங்கள் கூட்டாளிகளான மேற்கத்தேய நாடுகளின் கைகளில் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## விண்வெளியில் அதிகரிக்கும் சீனாவின் ஆதிக்கம்



(பிஜீங்)


விண்வெளியில் சீனா தனது செல்வாக்கை அதிகரித்து வரும் நிலையில் இந்த ஆண்டில் சுமார் 100 விண்வெளி ஏவுதல்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.சீனாவின் இந்த நடவடிக்கை புதிய வரலாற்று பதிவை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீன விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப நடவடிக்கை பற்றிய கடந்த ஆண்டுக்கான நீல அறிக்கையை அந்த நாட்டு விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப குழுமம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளதுடன், இந்த ஆண்டுக்கான சீனாவின் விண்வெளி ஏவுதல் நடவடிக்கைகள் தொடர்பிலும் அறிவித்துள்ளது.

இதன்படி சீனாவின் முதலாவது வணிக விண்வெளி ஏவுத்தளத்தில் இந்த ஆண்டுக்கான முதலாவது ஏவுதல் கடமை மேற்கொள்ளப்படவுள்ளது.அத்துடன், செயற்கைக் கோள் விண்மீன் தொகுதியின் இணைப்பு கட்டுமானம் விரைவுபடுத்தப்படவுள்ளது.சீன விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப குழுமம் சுமார் 70 முறை விண்வெளி செலுத் தல் கடமைகளை ஏற்பாடு செய்து 290 இற்கும் மேலான விண்கலங்களை விண்ணில் செலுத்தி, பல முக்கிய திட்டப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு சீனா 67 விண்வெளி ஏவுதல் கடமைகளைச் செயற்படுத்தியுள்ளதுடன் உலகளவில் இந்த நடவடிக்கைகளை செயற்படுத்தும் தரவரிசையில் இரண்டாவது இடத்தை சீனா பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)

## திற்கு ரஷ்யாவை
## வுஸ்திரேலியா



னார். னியின் மான சாங் வதை க அவு ளுடன் ம் என தெரி ால்னி


நடத்தப்பட்ட விதம் மற்றும் அவரது மரணத்திற்கு ரஷ்ய ஜனாதிபதியும் அரசாங்கமுமே காரணம் என அவுஸ்திரேலிய அரசாங்கம் கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளதோடு இது குறித்து சுயாதீன மற்றும் வெளிப் படையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.(நி-5-6)

## பாலஸ்தீனத்தை விடுவிக்ககோரி
# இஸ்ரேல் தூதரகம் முன்பாக
### தீக்குளித்த அமெரிக்க விமானப்படை வீரர்

(வோஷிங்டன்)

காசா மீதான அமெரிக்காவின் நிலைப்பாட்டை எதிர்த்து அமெரிக்காவில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்திற்கு வெளியே அமெரிக்க விமானப்படை வீரர் ஒருவர் தீக்குளித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் ஆயுதக் குழுவின் தாக்குதலை அடுத்து காசா மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. ஹமாஸ்க்கு எதிரான இந்த போரில் பெருமளவு அப்பாவி மக்கள்



பலியாகி வருகின்றனர். இதுவரை சுமார் 30 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் காசாவில் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேல் பாதுகாப்பு படை தரப்பில் சுமார் 200 வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பாலஸ்தீனத்துக்கு எதிரான இஸ்ரேலின் ஆதி ஆக்கிரமிப்பு முதல் தற்போதைய காசாபோர் வரை அமெரிக்காவின் ஆதரவு அதிகம்.

அமெரிக்காவின் இந்த ஆதரவுக்கு அமெரிக்கர்கள் மத்தியிலேயே அதிருப்தி நிலவி வருகிறது. அதன் வெடிப்பாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை வோஷிங்டனில் இஸ்ரேல் தூதரகத்துக்கு வெளியே அடையாளம் அறியப்படாத எரிபொருளை பயன்படுத்தி ஆரோன் தீக்குளித்தார். அமெரிக்காவின் சீக்ரெட் சர்வீஸ் ஏஜெண்டுகள் மூலம் உடனடியாக தீ அணைக்கப்பட்டு, அருகிலுள்ள மருத்துவமனையில் ஆரோன் அனுமதிக்கப்பட்ட போதும் அங்கே அவர் உயிருக்கு போராடி வருகிறார்.

"இனியும் நான் இனப்படுகொலைக்கு உடந்தையாக இருக்க மாட்டேன். பாலஸ்தீனத்தை விடுவிக்கவும்" என்று முழக்கமிட்டபடி ஆரோன் தீக்குளித்தார். (நி-5-6)

## ஜேர்மனியில் கஞ்சா வளர்க்க அனுமதி

(பெர்லின்)

ஒருவர் தனிப்பட்ட முறையில் 3 கஞ்சா செடிகள் வரை வீட்டில் வளர்க்கலாம் எனவும் தினமும் 25 கிராம் வரை கஞ்சாவினை பயன்படுத்தலாம் எனவும் ஜேர்மனி பாராளுமன்றம் சட்டம் நிறைவேற்றியுள்ளது.

ஜேர்மனியில் கடந்த வெள்ளிக்கிழமை கூடிய பாராளுமன்றம் இந்த சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தும் அரச தலைவர் ஓலாஃப் ஸ்கோல்ஸ் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.ஜேர்மனியில் சமீபகாலமாக இளைஞர்கள் மத்தியில் கஞ்சா பாவனை அதிகரித்து வருவதன் காரணமாக கறுப்பு சந்தையில் கஞ்சா விற்பனை அதிகரித்துள்ளது.இந்நிலையில் மால்டா மற்றும் லக்சம்பர்க் நாடுகளை தொடர்ந்து தற்போது ஜேர்மனியும் கஞ்சாப் பாவனையை சட்ட ரீதியாக அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது தேகாரோக்கியத்தை நாமே காப்போம்! அலட்சியம் வேண்டாம்!

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கொவிட்டின் தாக்கம், பொருளாதாரத்தின் வீழ்ச்சி, அவசிய உணவுப்பொருட்களின் விலையேற்றம், தரமான பொருட்களுக்கான கேள்வி, மக்களின் வாங்கும் திறனில் வீழ்ச்சி, குடும்பங்களின் வருமானத்தில் இறுக்கம், மாதாந்த வருமானத்தினால் தற்போதைய செலவை கட்டுப்படுத்த முடியாத நிலை, வைத்தியச் செலவுகள் அதிகரிப்பு, அவசியமான மருந்துகள் தட்டுப்பாடு, வாகனச் செலவும் போக்குவரத்து செலவும் கட்டுக்கடங்காமல் எகிறியிருக்கும் நிலை... வாழ்வாதாரத்தை தக்கவைக்க நினைக்கும் அனைத்து குடும்பங்களுக்குமான பேரிடி இது.

மனவுளைச்சலிலேயே தினமும் நாட்களை கடந்து செல்வதாக வறுமைப்பட்டுப்போன குடும்பத்தலைவர் சினந்து கொண்டார். மக்கள் மனதில் மகிழ்ச்சியில்லை. பல குடும்பங்களில் அடுப்பு எரிவதில்லை என்னும் உண்மையை இங்கே உணர்த்தியே ஆக வேண்டும். மூன்று வேளை உணவருந்திய மக்கள் தற்போது ஒரு வேளையேனும் வயிறார உண்டால் போதுமானதென நினைக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

எத்துணை இடர்வரினும் எம்மவர்கள் தமது சமயோசித புத்தியாலும் அதீத உழைப்பாலும் அனைத்து இடர்களையும் தாண்டி பெருமை சேர்த்தவர்கள் என்பதனை நாம்



அனைவரும் அறிவோம். எமக்கிருக்கும் விவசாயபூமி என்றும் பொய்த்ததில்லை. வானம் பார்த்து விவசாயம் செய்து வரலாறு கண்டவர்கள் இருக்கின்ற வளங்களை முழுமையாக பயன்படுத்தி இக்கால இடர்களைத் தாண்டிச் செல்வோம். விவசாயிகளுக்குள் இந்த இறுமாப்பு இருக்கும் வரை எமது மக்களுக்கான உணவை அவர்கள் உற்பத்தி செய்வதில் என்றும் அக்கறை காட்டுவர். இது அவர்களுக்கான கடமையும் கூட. அனைத்து விவசாயப் பெருமக்களின் கொள்கைகளும் அனைத்து மக்களுக்குமான உணவு உற்பத்தி செய்தல் என்பதோடு தானும் உண்டு ஏனையவர்களுக்கும் உணவளிக்கும் பக்குவம் அவர்களுக்குண்டு. இதற்கு நாமெல்லோரும் நாளொன்றில் குறிப்பிட்டகால அளவிற்கு உற்பத்தியாளனாக மாற வேண்டும். எமக்கான உணவின் குறிப்பிட்ட பகுதியை எமது இடத்தில் உற்பத்தி செய்தல் வேண்டும்.

உணவுத்தட்டுப்பாடு வரும் என்று பலரும் அடித்துரைத்தாலும் உணவிருந்தாலும் அதனால் எமக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்தினையும் உள்ளீர்க்க முடியாது. நாம் ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களாக இருக்கப்போகின்றோம் என்பதுதான் பல தாய்மார்களின் கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது. பிள்ளைகளின் மூளை தேவையான எவு வளர்ச்சியடைந்து தமது அறிவாற்றலை விருத்தி செய்கின்ற இளம் பருவத்தில் அவர்களுக்குத் தேவையான சமனான ஊட்டச்சத்தினை தத்தமது உணவின் மூலமாக பெற முடியாத சந்தர்ப்பங்கள் அதிகமாகும் என பலர் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். ஆக மொத்தத்தில் உடல், உள வளர்ச்சி குன்றியவர்களாக எமது எதிர்கால சந்ததி மாறப்போகின்றது என்னும் செய்தி அனைவருக்கும் அதிர்ச்சியான செய்தியாகவே வெளிவருகின்றது.

உணவுற்பத்தியில் அவரைப் பயிர்களினதும் சிறு தானியங்களினதும் பங்கு அளப்பரியது. அவரைப் பயிர்களில் குறிப்பாக உளுந்து,பயறு, கௌபி, கடலை, கொண்டல் கடலை, பருப்பு,துவரம் பருப்பு, நிலக்கடலை இவ்வாறாக கிடைக்கும் அதிகமான புரதம் உடலுக்கு மிகவும் முக்கியமானது.

அவரைப் பயிர்களில் தான் அதிக எவு புரதமுண்டு. சிறு தானியங்களில் உள்ள புரதச் சத்து, நார்ச்சத்து இவை தவிர குறிப்பிட்ட விற்றமின்கள், உடலுக்கு அவசியம் தேவையான அமினோ அமிலங்கள் என பலவற்றை சிறுதானியங்கள் கொண்டிருப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

இவ்வாறான அவரைப் பயிர்களையும் சிறுதானியங்களின் உற்பத்தியை பெருக்குவதற்கான வழிவகைகளை அனைவரும் கலந்தாலோசித்து நடவடிக்கைகளிலும் இறங்க வேண்டும். சிறுதானியங்களின் நல்லவிதைகள் உற்பத்தி செய்யப்பட்டு மக்களுக்கு அவர்கள் தம் நிலத்தில் பயிரிட வழிசெய்தல் வேண்டும்.

சிறு தானியங்களில் அதிகம் உள்ள புரதச்சத்து, நார்ச்சத்து, விற்ற மின்கள் மற்றும் குறிப்பிட்ட ஊட்டச்சத்துக்கள் இவற்றுடன் உடலில் இயற்கையாகவே நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வல்ல "அன்ரிஒட்சிசன்கள்" எனப்படும் உயிர்ச்சத்து குறிப் பாக தொற்று நோய்கள் எமது உடலை நெருங்காது பாதுகாத்துக் கொள்கின்றன.

குரக்கன், கம்பு, இறுங்கு, சாமை, குதிரைவாலி, வரகு, கேள்வரகு, தினை என பல வகையான சிறு தானியங்கள் எம்மூரில் உண்டு. ஆனால் இவற்றின் விளைச்சலும் உற்பத்தியும் போதாது. வழக்கமாக விளைச்சல் அதிகமாவதற்கு பசளைப் பிரயோகம் அவசியம். இவ்வாறான விளைச்சலை அதிகரிக்கும் செயற்பாடு ஆரோக்கியமானதாக இருந்தாலும் அனைத்து மக்களின் தேவைக்கும் இதனது உற்பத்தி போதாது. அதில் அதிகம் விருப்புடையவர் காளான் வளர்ப்பு பொறிமுறையை விடுத்து தத்தமது கைவண்ணத்தில் உருவான படைப்புக்களை காட்சிப்படுத்தி அவற்றை விற்பதற்கான முயற்சியும் கைகூடும் எனலாம்.

அரிசி, கோதுமை போன்ற தானியங்களுடன் ஒப்பிடும் போது சிறுதானியங்களில் பல வகையான புரதச்சத்து மற்றும் நார்ச்சத்து காணப்படுகின்றன. இவற்றினை எமது உணவுப் பாதுகாப்பிற்கு எடுத்துக்கொள்ளலாம். அனைத்து மக்களும் இவ்வாறான அவரைப் பயிர்களையும் சிறுதானியங்களையும் உற்பத்திசெய்யும் போது அவற்றுக்கான சந்தை வாய்ப்பு நிச்சயமாக அதிகரிக்கச் செய்யும். மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலமும் இவ்வருட கொண்டாடப்படும் நிகழ்வுகளில் பாரம்பரிய உணவுகளின் பங்களிப்போடு அனைவராலும் பயன்படுத்தும் உணவாக அவரைகளையும் சிறு தானியங்களும் விளங்குகின்றன.

இதை அனைவரும் உணர்ந்து அவரைப் பயிர்கள் மற்றும் சிறுதானியங்களை அதிகளவில் உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்கலாம். தன் கையே தனக்குதவி போல எம்மை [illegible]

# இன்று ஒரு தகவல் 50



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## காந்த ஈர்ப்பு விசை

நிலாவுக்கும் பூமிக்கும் சம்பந்தம் இருக்குது என்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீங்க.

ஆனால் நிலாவுக்கும் நம்ம வயிற்றுக்கும் சம்பந்தம் இருக்கு என்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீங்களா? நான் சொன்னால் நீங்கள் சந்தேகப்படுவீர்கள்.

இல்லினாய்ஸ் யுனிவர்சிட்டியில உள்ள ஒரு ஆராய்ச்சியாளர் இதைச் சொல்கிறார். அவர் பெயர் proof Ralph Morris. அந்தப் பேராசிரியர் 5 வருடங்களாக ஒரு ஆராய்ச்சி செய்தார். 100 பேருக்கு மேலே சோதனையும் செய்து பார்த்தார். அப்படி செய்துவிட்டு சொல்லுறார். வயிற்று வலிக்கும் நிலாவுக்கும் சம்பந்தம் இருக்கிறது. அதாவது இன்னமும் குறிப்பாக சொல்லணும் என்றால் அல்சருக்கும் பௌர்ணமிக்கும் சம்பந்தம் இருக்கு என்கிறார் அவர்.

அவர் பல பேரை சோதனை செய்து பார்த்தார். அவர்களுக்கு எல்லாம் மார்புவலி, Ulcer Bleeding இதெல்லாம் பௌர்ணமி காலத்தில் அதிகமாக இருந்ததாம்.

அது சரி.. 2 1/2 இலட்சம் மைலுக்கு அப்பால் இருக்கிற அவ்வளவு பெரிய நிலாவுக்கும் இங்கே இருக்கிற சிறிய வயிற்றுக்கும் எப்படி சம்பந்தம் இருக்க முடியும்.

அதற்கு காரணம் என்ன என்று அவரே சொல்லி இருக்கிறார். பூமிக்கும் நிலவுக்கும் இடையே ஏற்படக்கூடிய காந்த ஈர்ப்பு சக்திதான் அதற்கு காரணமாம்.மனிதனுடைய உடம்பையும் மனதையும் இந்த சக்தி பாதிக்குதாம்.

காந்தசக்தி என்றால் அது இரும்பைத்தானே பாதிக்கும் உடம்பை எப்படி பாதிக்கிறது.

மனிதன் உடம்பிலேயும் இரும்பு இருக்குது. அதனாலே அந்த ஈர்ப்புசக்தி நம்ம உடம்பைப் பாதிக்கிறது. இதை நிரூபிக்கிறதுக்கு ஒரு சோதனை கூட செய்து பார்த்து இருக்காங்க. எப்படி என்றால்?

முதலிலே ஒரு கூண்டு தயார் செய்தார்கள். அந்தக் கூண்டுக்குள்ளே ஒரு எலியை பிடிச்சு விட்டாங்க. அந்த எலி சுத்தி சுத்தி ஓடிச்சு.

காந்தசக்தியை அந்தக் கூண்டுக்குள்ளே உண்டாக்கினாங்க. உடனே அந்த எலியிடம் ஒரு மாறுதல். அது யோசனை செய்கிறது. மயங்கி நிற்குது.சுத்தி ஓடுகிறது. இதிலே இருந்து என்ன தெரியுது?

காந்தம் உண்டாக்கக் கூடிய ஈர்ப்புசக்தி அந்த எலியோட உடம்பையும் மனதையும் பாதிக்கிறது.

இதே மாதிரித்தான் பூமிக்கும் நிலவுக்கும் இடையில் ஏற்படக்கூடிய காந்தசக்தி மனிதனுடைய உடம்பையும் மனதையும் பாதிக்கிறது.

எங்க ஊரிலே ஒரு பாட்டி இருந்தாங்க. அவங்க அப்பவே சொல்லுவாங்க. அமாவாசையிலே மருந்து சாப்பிடாதே. பௌர்ணமியிலே மருந்து சாப்பிடாதே என்று. அதையெல்லாம் யாரும் கேட்கிறதில்லை.

பல பேர் அமாவாசை அன்றைக்கு வயிற்றுக்கு ஓய்வு கொடுக்கிறது இப்பவும் வழக்கமாகத்தான் இருக்குது.

இப்ப உள்ள டொக்டர்கள் 'கெடு' வைக்கிறது உண்டு: இன்னமும் 24 மணிநேரம் தாண்டினாத்தான் எதையும் உறுதியாக சொல்ல முடியும். அந்த நேரம் தாண்டி விட்டால் நோயாளி ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார் என்று அர்த்தமாம்.

இதேமாதிரி அந்தப் பாட்டியும் 'கெடு' வைப்பாங்க.

என்ன பாட்டி அந்த ஆள் பிழைக்குமா? என்று கேட்டால் எதுக்கும் இந்த அமாவாசை தாண்டட்டும் அதுக்கப்புறம் சொல்கிறேன் என்பாங்க.

இப்படி பல பேருக்கு கெடு வைச்சிருந்த அந்த பாட்டியையே ஒரு அமாவாசை வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டது.

பூமிக்கும் நிலவுக்கும் இடையில் இருக்கக்கூடிய காந்த சக்தி மனிதனுடைய மனதையும் பாதிக்கிறது.

இதை மனோதத்துவ டாக்டர்களே ஒத்துக் கொள்கிறார்கள். புத்திசுவாதீனம் இல்லாதவங்க அது மாதிரி நேரத்தில வழக்கத்தை விட கொஞ்சம் அதிகமாக நடந்து கொள்ளுவார்கள்.

வழக்கமாக என்னை வந்து பார்க்கின்ற சிநேகிதன் ஒருநாள் வரவில்லை.மறுநாள் அவனை பார்த்து ஏன்டா நேற்று என்னை வந்து பார்க்கவில்லை என்று கேட்டேன். நேற்று பௌர்ணமி. அதனாலே உன்கிட்ட வரவேண்டாம் என்று கொஞ்சம் ஒதுங்கியிருந்தேன்! என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரவல் மண் அகழ்வினை தடுத்து நிறுத்துங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

அமதிபுரம் அக்கராயன் கிழக்கின் யூனியங்குளம் பகுதிகளில் உள்ள பெரும எவு காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

கிரவல்அகழ்வுநடைபெற்ற பகுதிகளில் மர நடுகையினை முன்னெடுப்பதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் அமதிபுரத்திலும் அக்கராயன் கிழக்கிலும் தொட ரும் கிரவல் அகழ்விற்கு அனு மதி வழங்க வேண்டாம் என இக் கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (நி-5-6-350)

# பேருந்தில் பயணித்த பெண்ணிடம் கொள்ளை

(அக்கராயன்)

பேருந்தில் பயணித்த பெண் ஒருவரின் கைப்பை யினுள் இருந்த பணம் மற் றும் உடைமைகள் திருடப் பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள் ளது.

கதிர்காமத்தில் இருந்து யாழ் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தில் மாங் குளத்தில் ஏறிய பெண் பளையில் இறங்கி முச்சக்கரவண்டி ஒன்றில் பயணித்த வேளை கைப்பை யினுள் பணத்தினை தேடியபோது கைப்பை திறந் திருந்ததாவும் உள்ளிருந்த ரூ.22,000 பணம், உள்ளி ருந்த உடைமைகள் அனைத் தும் திருடப்பட்டுள்ளது என தெரியவந்ததையடுத்து சம் பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.(நி-5-6-350)

# அதிகமான பூசணி செய்கையில் ஈடுபட்டுள்ள கண்ணகைபுர விவசாயிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்ணகை புரம் விவசாயிகள் பூசணி பயிர்ச்செய்கையில் கூடுத லாக ஈடுபட்டுள்ளனர்.

தற்போது அக்கராயன் குளத்தில் இருந்து கண்ண கைபுரம் கிராமத்திற்கு மேட் டுப் பயிர்ச் செய்கைக்காக நீர் திறந்து விடப்பட்டுள்ள நிலை யில் விவசாயிகள் பூசணி உட்பட மேட்டுப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையில் கூடுதலாக பூசணி பயிர்ச்செய்கையில் ஈடுபட் டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத் தில் கண்ணகைபுரம், கன காம்பிகைக்குளம், பிரமந் தனாறு என்பன மேட்டுப் பயிர்ச்செய்கைக்குரிய கிரா மங்களாகும். கடந்த காலங் களில் கண்ணகைபுரம் விவ சாயிகள் பெருமளவில் பூசணி செய்கையில் ஈடுபட்டு வரு மானம் பெற்று இருந்தனர்.

அதேவேளை பூசணியினை விற்பனை செய்ய முடியாத நிலையிலும் மாவட்டச் செய லாளர் எடுத்த நடவடிக்கை கார ணமாக கண்ணகைபுரத் தில் இருந்து தென்னிலங்கை உட்பட பல்வேறு இடங்க ளுக்கு கண்ணகை புத்தின் பூசணிகள் ஏற்றுமதி செய்யப் பட்டு இருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி-5-6-350)







வவுனியா வடக்கு, சின்னடம்பன், இராசபுரம் கிரா மத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில் மாணவர்களின் பயணத்திற்கான பேருந்து ஒன்று புலம்பெயர் தமிழர் அமைப்பால் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. (படம்: வசந்தரூபன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3051

**வீரா**

பாஸ்வேர்டு மறந்து போச்சுன்னு தாண்டா Forget password குடுத்தேன்..



அங்க வந்து டைப் யுவர் ஒல்டு பாஸ்வோட்னு சொல்லுட்டு இருக்க..

**மணி**

சம்பாதித்து செலவு செஞ்ச காலம் போயி..



இப்போ முதல்லயே செலவு செஞ்சிட்டு அதை அடைக்க சம்பாதிச்சுட்டு இருக்கோம்..

**கலை**

திருமணமான ஆண்களின் வாழ்க்கையில் முக்கியமான இரு பிரச்சினைகள்...



1. பொருளாதாரம்
2. பொருந்தா "தாரம்"

**குணம்**

இல்லாதவர்கள் தான் இருப்பதை பங்கிட்டு வாழ்கிறார்கள்...



இருப்பவர்கள்... பதுக்கி மாய்கிறார்கள்..!

**பவி**

என்னடா இது... பெப்ரவரிக்கே இப்படி அனல் காத்து வீசுதே...



மே மாசமெலாம்.., அக்கினியே வீசும் போலயே...

**விஜி**

ஸ்கூலோ காலேச்சோ தனியா மாட்டுனாதான் கஷ்டமே...



நண்பர்களோட ஒரு குருப்பா மட்டுனா அதுவே சந்தோசமா மாறிவிடும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 418



ஆம் அது சாதாரண கத்தி அன்று என்பதாகச் சொன்னோமே? எவ்வளவு பலசாலியானாலும் அதை ஒரு கையினால் தூக்கி நிறுத்துவதே பெரிய காரியம்.

இரண்டு கையினாலும் பிடித்துக் கொண்டால்தான் கத்தியைச் சுழற்றவும் எதிரியைத் தாக்கவும் முடியும்.

இளவரசர் அவ்விதம் இரு கையினாலும் கத்தியைச் சுழற்றியபோது அவரைப் பார்த்தால் அரண்மனையில் சுகபோகங்களில் வளர்ந்த கோமள சுபாவம் படைத்த ராஜகுமாரனாகத் தோன்றவில்லை. பழைய காலத்து வீராதி வீரர்களான பீமனையும் அர்ச்சுனனையும் அபிமன்யுவையும் போல் விளங்கினார். இன்னும் திருமேனியில் தொண்ணூற்றாறு புண்சுமந்த விஜயாலய சோழரையும் யானை மேல் துஞ்சியவரான இராஜாதித்த தேவரையும் ஒத்து, அவர்களுடைய வழியில் வந்தவர் தாம் என்பதை ஞாபகப்படுத்துமாறு வீர கம்பீரத் தோற்றத்துடன் திகழ்ந்தார்.

வந்தியத்தேவனும் இரண்டு கையினாலும் கத்தியைப் பிடித்துச் சுழற்றத் தொடங்கினான். ஆரம்பத்தில் அவனுடைய மனத்தில் குழப்பமும் தயக்கமும் குடிகொண்டிருந்தன. போகப் போக, மனம் திடப்பட்டது. வீர வெறி மிகுந்தது. எதிரி தன் போற்றுதலுக்கு உரிய இளவரசர் என்பது மறந்தது. எதற்காக இந்தச் சண்டை என்னும் எண்ணமும் மறைந்தது. எதிரியின் கையில் சுழலும் கத்தி ஒன்றே அவனது கண்முன் நின்றது. அக்கத்தியினால் தாக்கப்படாமல் தான் தப்புவது எப்படி, அதைத் தட்டி எறிந்து விட்டு எதிரியைக் காயப்படுத்துவது எப்படி என்ற ஒரே விடயத்தில் அவன் கவனமெல்லாம் பதிந்திருந்தது.

கத்திகள் சுழலும் வேகமும் அவை ஒன்றின் மேல் ஒன்று மோதி 'டணார்', 'டணார்', என்ற ஒலியை எழுப்பும் வேகமும் முதலில் சவுக்ககாலத்தில் தொடங்கி, மத்திம காலத்தைத் தாண்டி, துரித காலத்துக்கு வந்தன. இளவரசருடைய காரியம் முதலில் ஆழ்வார்க்கடியானுக்கும் விளங்கவில்லை. ஆனாலும், அதில் ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டும் என்று அவன் கருதினான். வருகிறவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் அவர்கள் இன்னார் என்று தெரிந்து கொண்டு அதற்கேற்ப நாம் செய்ய வேண்டியதை நிர்ணயிப்பதற்கும் அது ஓர் உபாயமாயிருக்கலாம். ஆகவே அந்த இரு வீரர்களுடைய குதிரைகளையும் சாலை மத்தியில் குறுக்கே நிற்கும்படி விட்டு, அவற்றின் தலைக் கயிறுகளைப் பிடித்துக் கொண்டு ஆழ்வார்க்கடியான் காத்திருந்தான்.

சாலையில் எதிர்ப்புறமிருந்து வந்து கொண்டிருந்த குதிரை வீரர்கள் நெருங்கி வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் புலிக்கொடி பறந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும் ஆழ்வார்க்கடியானுடைய கவலை நீங்கியது. வருகிறவர்கள் நம்மவர்கள் தான். ஆனால் யாராயிருக்கும்?

அவர்களில் முன்னால் வந்த கட்டியக்காரர்கள் அந்த விடயத்தைப் பறையறைந்து அறிவித்தார்கள்.

"ஈழத்துப் போரில் மகிந்தனைப் புறங்கண்ட இலங்கைப் படைகளின் சேனாதிபதி வைகையாற்றுப் போரில் வீர பாண்டியன் தலை கொண்ட கொடும்பாளூர்ப் பெரிய வேளார் பூதி விக்கிரம கேசரி மகாராஜா விஜயமாகிறார்! பராக்!" என்று ஒரு இடி முழக்கக் குரல் ஒலித்தது.

"பல்லவ குலத் தோன்றல்-வைகைப் போரில் வீரர் பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர் - வடபெண்ணைப்போரில் வேங்கிப் படையை முறியடித்த பராக்கிரம பூபதி-பார்த்திபேந்திரவர்மர் விஜயமாகிறார்! பராக்" என்ற இன்னொரு இடி முழக்கக் குரல் ஒலித்தது. இப்படிக் கட்டியம் கூறியவர்களுக்குப் பின்னால் சுமார் முப்பது குதிரை வீரர்கள் வந்தார்கள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நல்ல நண்பர்கள்



ஒரு காட்டுப் பகுதியில் ஒரு அணில் வாழ்ந்து வந்தது. அந்த அணிலுக்கு ஒரு முயல் நண்பனும், மந்திரம் தெரிஞ்ச ஒரு ஆந்தையும் நண்பர்களாக இருந்தார்கள்.

அவங்க மூன்று பேரும் எப்பவும் தங்களோட இடத்துல ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டே இருப்பார்கள்.

ஒரு நாள் முயலோட வீட்டுக்கு பக்கத்துல ஒளித்து பிடித்து விளையாடினார்கள். அப்போது அணில் மெதுவாக முயலோட வீட்டுக்குள்ள போய் ஒளிந்து கொள்ளப் பார்த்தது.

அப்போது தெரியாம அணிலோட வால் பட்டு முயலுக்கு ரொம்ப பிடித்தமான ஜாடி உடைந்து போனது. அணிலுக்கு என்ன செய்வது என்று தெரியல, அடடா இந்த ஜாடி முயலுக்கு ரொம்ப பிடித்த ஜாடியாச்சே இது உடைந்தது தெரிஞ்சா முயல் ரொம்ப வருத்தப்படுமே என்று நினைத்தது அணில்.

இப்படி தெரியாம ஒரு பெரிய தப்ப பண்ணிட்டமேன்னு வருத்தப்பட்ட அணில், அந்த உடைந்த ஜாடிய எடுத்துட்டு போய் ஒரு மரத்தோட அடிப் பகுதியில இருந்த பொந்துல ஒளிச்சு வைத்திருந்தது.

விளையாடி முடிச்ச முயல் வீட்டுக்குள்ள வந்தது. உள்ள வந்த முயல் தனக்கு ரொம்ப பிடித்த ஜாடி காணாம போனதை பார்த்து திகைச்சு போய் விட்டது. முயல் ரொம்ப வருத்த படுறத பார்த்த அணிலுக்கு ரொம்ப சங்கடமா போய்விட்டது. இதுக்கு என்ன தீர்வு என்று மந்திர ஆந்தை கிட்ட போய் கேட்டது அணில்.

தெரிந்து செய்த தப்போ தெரியாம செய்த தப்போ அந்த தப்ப திருத்திக் கொள்ள ஒரு மந்திரம் என்னிடம் இருக்கிறது என்று சொல்லியது ஆந்தை.

உடனே குதூகலமான அணில் அந்த மந்திர த்தை சொல்ல சொல்லி கேட்டது. உடனே மந்திர ஆந்தை சொல்லியது அந்த மந்திரம் என்ன என்றால் அதுதான் மன்னிப்பு என்று சொல்லியது.

அணிலுக்கு ஒன்றுமே புரியல, நீ அந்த ஜாடிய தெரியாம உடைத்ததில் தப்பே இல்லை ஆனா அந்த தப்பு அடுத்தவங்களுக்கு தெரிய கூடாது என்று அந்த உடைந்த ஜாடிய ஒளிச்சி வச்சு இன்னொரு தப்ப செய்து விட்டாய்.

முதல் தவறுக்கு எப்பவும் மன்னிப்பு உண்டு. ஆனா நீ செய்த இரண்டாவது தவறுக்கு மன்னிப்பு கிடையாது. இருந்தாலும் அது உன்னோட நண்பன் கையில இருக்கு.

முதலில் உண்மைய போய் முயல் கிட்ட சொல்லு அது உன்னோட இரண்டாவது தவறை சரி செய்வதற்கு அடுத்ததா அதனிடம் மன்னிப்பு கேள் அது நீ செய்து முதல் தப்ப சரி செய்து விடும் என்று சொல்லியது ஆந்தை.

உடனே அந்த மர பொந்துக்கு போன அணில் அந்த உடைந்த ஜாடிய எடுத்துகொண்டு வந்து முயலிடம் காட்டியது. நண்பனே நான் தெரியாம உன்னோட ஜாடிய உடைத்து விட்டேன்.

அந்த விடயம் தெரிந்தால் நீ ரொம்ப வருத்தப்படுவாய் என்று அதை ஒளித்து வைத்தேன். ஆனா நீ அந்த ஜாடி தொலைந்து போச்சுது என்று நினைத்து அதைவிட ரொம்ப வருத்தப்படுகிறாய்.

அந்த ஜாடிய உடைத்ததிற்கும், அதை உன்கிட்ட இருந்து மறைச்சதுக்கும் என்ன மன்னித்து விடு என்று சொல்லியது.

இதை கேட்ட முயல் சிரிச்சிகிட்டே சொல்லியது அருமை நண்பனே நீ அந்த ஜாடியை உடைத்தது தெரியாம நடந்த விபத்து. நீ அதை மறைத்தது கூட நான் வருத்தப்பட கூடாது என்று தான். அதனால எனக்கு இப்ப ஒரு வருத்தமும் இல்லை என்று சொல்லி அணி லிடம் இருந்த உடைந்த ஜாடிய வாங்கியது.

வீட்டுக்குள்ள போய் அணிலும் முயலும் சேர்ந்து அந்த ஜாடிய ஒட்ட வைத்தன. அந்த ஜாடி இப்ப ரொம்ப அழகாவே இருந்தது. இத பார்த்து முயல் ரொம்ப சந்தோசப்பட்டது. உடனே தனக்கு உரிய நேரத்துல நல்லது சொல்லி புரியவைத்த ஆந்தைக்கு நன்றி சொல்லியது அணில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கிறோம்.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த சமயத் தலைவர்கள் இணைய வேண்டும்

மத நல்லிணக்கம் எனும் பேசுபடுபொருள் நினைத்தளவுக்கு வெற்றியைத் தரவில்லை.

மாறாக, மத நல்லிணக்கம் என்ற பெயரில் சிலர் தமது மதங்களின் நலன் கருதிய செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

அதிலும் சில சமயங்கள் தங்களை முன்னுரிமைப்படுத்துவதில் தீவிரம் காட்டின.

ஆம், சிலரைச் சில காலம் ஏமாற்றலாம். பலரைப் பல காலம் ஏமாற்ற முடியாதென்பது அடிப்படை உண்மை.

ஆக, மத நல்லிணக்கம் என்ற பேரில் காய்க்குள் பழம் ஓடினால் அது எப்படியோ தெரியவரும்.

எனவே மத நல்லிணக்கம் என்பது மனம், வாக்கு, காயம் எனும் திரிகரண சுத்தியோடு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதைவிடுத்து, முயல்களை அழைத்து நரிகள் மாநாடு நடத்திய கதையாக இருந்தால், மத நல்லிணக்கம் என்பது மிக மோசமான விளைவையே ஏற்படுத்தும்.

இதை நாம் கூறும்போது இது எதற்காக? என்ற ஐயம் பலரிடம் எழலாம்.

நாம் இங்கு பிரஸ்தாபிப்பது, மத நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் அத்தனை விடயங்களிலும் சம்பந்தப்பட்ட சமயப் பிரதிநிதிகள் ஒருமித்துக் கலந்து கொள்ளவேண்டும் என்பதுதான்.

உதாரணத்துக்கு இந்த நாட்டின் ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சமயத் தலைவர்களுடன் சந்திப்பதாக இருந்தால், அந்த சந்திப்பை தனித் தனியாக மேற்கொள்வதோ அல்லது ஒரு சமயத் தலைவரை மட்டும் சந்தித்துவிட்டுச் செல்வதோ தவிர்க்கப்பட வேண்டும்.

மாறாக, தமிழ் இனம் சார்ந்த மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய சமயத் தலைவர்களை ஒன்றாக ஓர் இடத்தில் சந்தித்து கலந்துரையாடும்போது, அங்கு இனம் சார்ந்த நலன் ஏற்படுவதுடன் சமய நல்லிணக்கமும் ஏற்படும்.

இதேபோன்று தமிழ்த் தரப்புகளிடையே ஏற்படுகின்ற கருத்து வேற்றுமைகளின்போது அவர்களை ஒற்றுமைப்படுத்துகின்ற முயற்சிகளை சமயத் தலைவர்கள் செய்வதாக இருந்தால், அது மிகவும் வரவேற்கப்பட வேண்டும்.

ஆனால் இங்கும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சமயத் தலைவர்கள் கூட்டாகச் சேர்ந்து அந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து ஒரு குறிப்பிட்ட சமயம் தான் மட்டும் தனித்து நின்று தமிழ்த் தரப்புகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்த முற்பட்டால், அது பலத்த விமர்சனங்களை ஏற்படுத்துவதுடன் அந்த இணக்கப்பாடானது உள்நோக்கம் கருதிச் செய்யப்பட்டதாகவும் கருதப்படும்.

மேலும் தங்களுடையதே முதன்மைச் சமயம். எங்களை மீறி எவரும் எதுவும் செய்ய முடியாது என்பதான கருத்தும் அதற்குள் உள்ளடங்கும்.

எனவே இவ்வாறான கருத்துக்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்காமல், நாம் அனைவரும் சேர்ந்து தமிழ்த் தரப்புகளிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தினோம் என்ற முடிவை நம் சமயங்கள் செய்தாக வேண்டும். அதைச் செய்யும் போது மத நல்லிணக்கம் தானாக ஏற்படும்.

# இலங்கையிலிருந்து புறப்படவிருந்த 6 விமானங்கள் திடீரென இரத்து

(கொழும்பு)

இலங்கையிலிருந்து புறப்படவிருந்த 06 விமானங்கள் திடீரென இரத்துச் செய்யப்பட்டமையினால் பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பில் வருந்துவதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் பொறியியலாளர் அதுல கல்கட்டிய தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கன் விமான சேவையில் தொழில்நுட்ப கோளாறுகள், விமான உதிரிப் பாகங்கள் தட்டுப்பாடு, ஊழியர்களின் பிரச்சினைகள் என பல நெருக்கடிகள் காணப்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தன்னிடம் பல ஆலோசனைகள் இருப்பதாகவும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் அதுல கல்கட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும், விமானங்களுக்கான டிக்கெட்டுகள் பல மாதங்களுக்கு முன்னரே விற்பனை செய்யப்படுவதாகவும், சில நேரத்தில் விமானத்தில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டால், விமானங்களை இரத்து செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியா, தாய்லாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இடங்களுக்கு செல்லவிருந்த 06 விமானங்கள் நேற்று இரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சாவகச்சேரியில் காலாவதியான உணவுகளை காட்சிப்படுத்திய

## வர்த்தகருக்கு 62 ஆயிரம் ரூபாய் தண்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பகுதியில் காலாவதியான உணவு பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தி வைத்திருந்த வர்த்தகருக்கு 62 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 20ஆம் திகதி பொதுச் சுகாதார பரிசோதகர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், வர்த்தக நிலையம் ஒன்றில் விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த காலாவதியான பிஸ்கட், சோடா மற்றும் பழுதடைந்த கடலைப் பைகள் என்பன மீட்கப்பட்டன.

அதனை அடுத்து குறித்த வர்த்தகருக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட நிலையில் குறித்த வழக்கு நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அதன் போது மன்றில் முன்னிலையான வர்த்தகர் விசாரணைகளில் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, அவரை கடுமையாக எச்சரித்த மன்று, அவருக்கு 62 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (ம-7,33)

# பொலிஸ்மா அதிபர் தென்னக்கோனுக்கு எதிராக

## 7 மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

பதில் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றிவந்த தேஷபந்து தென்னக்கோனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் 36ஆவது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கும் எதிர்ப்பு தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் 7 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேஷபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராக கத்தோலிக்க திருச்சபை, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட 7 தரப்பினர் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

தாக்கல் செய்யப்பட்ட ஏழு அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பது தொடர்பான அரசியலமைப்பு பேரவைக்கு இன்னும் அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை என நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# புதிய சிறைச்சாலைகளை அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசல் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண புதிய சிறைச்சாலைகளை அமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சில சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட நடவடிக்கைகள் காரணமாகவே தற்போது சிறைச்சாலையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு பிரதான காரணம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேவைக்கு ஏற்ப புதிய சிறைகள் விரைவில் நிறுவப்படும் என்றும் சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதைக் காரணம் காட்டி சட்ட நடவடிக்கைகளை தாமதப்படுத்த முடியாது என்றும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் ஏற்படக்கூடிய நெரிசலைத் தவிர்ப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் புதிய கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்தும் அதேவேளையில், குறிப்பிட்ட பிரச்சினைக்கு தீர்வாக, கைதிகளை திறந்தவெளி சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# தெற்கு அதிவேக வீதியில் கோர விபத்து - இருவர் பலி

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் குருந்துகஹ - ஹெதெக்ம பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

தொடங்கொடவிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த லொறியொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் அதிவேக வீதியின் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தையடுத்து லொறியின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

12



இலங்கை முஸ்லிம்களின் தமிழ் பேச்சுவழக்கில் உள்ள சில அரபு மொழி சொற்கள்.

1.உம்மா - தாய் (அரபு மொழியில் உம் என்றால் தாய் என்று பொருள்)

2. சுபோ - காலை (அரபு மொழியில் சுபஹ் என்றால் காலை என்று பொருள்)

3. மவுத்து - மரணம்
4. மையத்து - சடலம்
5. மொஹப்பத் - பாசம்
6. கபுரு - மயானம்

இலங்கை முஸ்லிம்களின் தமிழ் பேச்சுவழக்கில் உள்ள சில சிங்கள சொற்கள்.

1. கந்த - மலை
2. சொஹொன - மயானம்
3. கொம்பெல்லா - நத்தை

இலங்கை முஸ்லிம்களின் பேச்சு மொழியில் சில வாக்கியங்கள். உதாரணமாக கீழே தரப்பட்டுள்ளன.

1. எனக்கு இப்ப தே தணி வாணா, எனக்கு குடிக்ய ஏலா - எனக்கு இப்பொழுது தேநீர் வேண்டாம், என்னால் குடிக்க முடியாது.

2. நாங்க நல்ல புள்ளவள் தனே? - நாம் நல்ல பிள்ளைகள் தானே?

3. நா ஊட்டு கு போறேன் - நான் வீட்டிற்குச் செல்கிறேன்.

4. அந்த கந்த மார பசுந்தா ஈக்கி/இரிக்கிது - அந்த மலை மிகவும் அழகாக இருக்கிறது. ("பசந்த்" என்றால் குஜராத்தி மொழியில் 'ஆசை' அல்லது 'விருப்பம்' என்று பொருள் "கந்த" என்பது சிங்கள மொழியில் மலை ஆகும்)

5.கரன்ட் போன பொறோ ஒன்டும் செய்ய ஏலா = மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் பின் எதுவும் செய்ய முடியாது.

6. நேத்து எங்ட ஊட்டு கு கள்ளென்வள் வந்தான்வள் - நேற்று திருடர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

7. சொஹொன கி பணிய ஏன்ட ஊடு ஈக்கி / இரிக்கிது - மயானத்திற்கு கீழே என் வீடு உள்ளது. (சிங்களத்தில் "சொஹொன" என்பதன் பொருள் மயானம் ஆகும்)

8.சுபோல போவோம் - காலையில் போவோம். ("சுபஹ்" என்றால் அரபு மொழியில் காலை என்று பொருள்படும்).

9. வாப்பா மவுத்து=அப்பா இறந்துவிட்டார். (குஜராத்தி மொழியில் "வாப்பா" அல்லது "பாப்பா" என்றால் அப்பா/தந்தை என்று பொருள். அரபு மொழியில் "மவுத்" என்பதன் பொருள் 'இறப்பு' அல்லது 'மரணம்' ஆகும்)

10. அப்சு டி போவ வாணா - அதனால் போக வேண்டாம்.

11. எங்ட நானா கு சோமில்ல - எங்கள் அண்ணன் சுகயீன முற்றுள்ளார் / நோய்வாய்ப்பட்டிருக்கிறார்.

12. ஒங்ட தாத்தா சரியான ஒசரம் இலியா? - உங்கள் அக்கா மிகவும் உயரமானவர் அல்லவா?

13. நா அவள முந்தி போட்டேன் -நான் அவளை முன்னர் நேசித்தேன்.

14.ஒங்ட பேர் என்னா ராஜா? - உங்கள் பெயர் என்ன தம்பி?

15.யே ஒனக்கு சல்லி வேணும் - ஏன் உனக்கு காசு / பணம் வேண்டும்.

16.அய் கி பொறோ நா கீழ புழுந்துட்டேன் - அதன் பின் நான் கீழே விழுந்துவிட்டேன்.

17.ஒங்ட சாச்சா கு எனய தெரியா - உங்கள் சித்தப்பாவுக்கு என்னை தெரியாது. (கிந்தி மொழியில் "சாச்சா" என்றால் சித்தப்பா ஆகும்)

18. நீங்க முந்தி எங்க இருந்த? தூத்துகுடியா? - நீங்கள் முன்னர் எங்கே இருந்தீர்கள்? தூத்துக்குடியிலா?

19. யே சல்லிய அநியாயம் ஆக்குறாய்? -ஏன் பணத்தை/காசை வீண்விரயம் செய்கிறாய்?

20. ஒங்ட உம்மா கு அய் நெனோ இரிக்யா?-உங்கள் அம்மாவுக்கு அது நினைவிருக்கிறதா?

21. அவென் கு அது யாத் இல்ல -அவனுக்கு அது நினைவில்லை. (குஜராத்தி மொழியில் "யாத்" என்பதன் பொருள் நினைவு ஆகும்)

22. குரால விட எழுத கொல கொஞ்சம் யோசிச்சி பாத்து விட எழுத வேணும் / எழுதனும் - கோராவில் பதில் எழுதும்போது சிறிது சிந்தித்து எழுத வேண்டும்.

### மலையகத்தமிழ்

இலங்கையில் மலையகத் தமிழ் என்பது, இலங்கையின் நடுப்பகுதியில் செறிந்து வாழுகின்ற தமிழ் மக்களிடையே வழங்கும் தமிழைக் குறிக்கிறது. இது இலங்கைத் தமிழின் ஒரு வட்டார வழக்கு ஆகும். இப்பகுதியில் வாழும் மக்கள் பிற இலங்கைத் தமிழரோடு ஒப்பிடுகையில் அண்மைக் காலத்தில் இலங்கைக்குத் தமிழ்நாட்டில் இருந்து பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காகப் பிரித்தானியரால் கூட்டி வரப்பட்டவர்கள். இதனால், இவர்களது தமிழ் வழக்கு தமிழ் நாட்டுத் தமிழ் வழக்கோடு கூடிய நெருக்கமானது.

மொழி என்ற அடிப்படையில் மலையகத் தமிழர்கள் தனித்துவம் உடையவர்களாக விளங்குகின்றனர். அதாவது மொழி அடிப்படையில், ஈழத் தமிழர்கள் தமிழ் மொழிப் பேச்சு வழக்கில் பாணர் பரம்பரை, இந்திய மலையாள பாரம்பரிய சொற்பண்பு கலந்த தமிழ் உச்சரிப்பும் பாணியும் கொண்டவர்கள். மலையகத் தமிழர்கள் தமிழ்நாட்டில் தென்னிந்திய பாரம்பரிய சொற்கள் கலந்த உச்சரிப்பும் பாணியும் கொண்டவர்களாக அமைகின்றனர்.

மலையகத் தமிழரது மொழி மற்றும் பண்பாடு எத்தகையது என்பதை புரிந்து கொள்ள வேண்டுமாயின் மக்களின் பூர்வீக வாழ்விடமான தென்னிந்திய பிரதேசங்களை பற்றிய அறிவு அவசியமாகின்றது. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், இராமநாதபுரம் முதலான பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள். அதனால் அவ்விடங்களின் பேச்சுத்தமிழே பாவனையில் இருந்தது.

எனினும் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளாகச் சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் வாழ்வதால் அவர்களது மொழி வழக்கிலும் இது தொடர்பான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இது தவிர இப்பகுதித் தமிழ் மக்களில் பலர் தொடக்கத்தில் பெருந்தோட்டத் தொழில் துறையில் பணிபுரிந்தவர்கள். இதனால், இத்துறை தொடர்பான பல சொற்களும் இவர்களது மொழியில் பொதுவாகப் புழங்குகின்றன.

சிலர் கல்வி மற்றும் தொழில் நிமித்தமாக ஏனைய இடங்களுக்குச் செல்லும் போது தமது மலையகத் தமிழரின் மொழியை சிலர் மறந்தும் சிலர் கட்டாயத்தின் பேரிலும் மாற்றிக் கொள்ள முயல்கின்றனர். அதாவது வடக்கு, கிழக்கு, தென் பகுதிகளுக்கு கல்வி அல்லது தொழில் காரணமாக செல்பவர்கள் அங்குள்ளவர்கள் பேசும் பிரதேச மொழியோடு தம் மொழியையும் கலந்து பேச பழகிக் கொள்கின்றனர். சிலர் வேறு இடங்களுக்கு செல்லும் போது தாம் பேசும் மலையகத் தமிழ்மொழியை கௌரவ குறைவாகவும் வேறு பிரதேச மொழிகளை உயர்வாகவும் எண்ணி தம் மலையக தமிழ்மொழியை மறந்து பேச பழகிக் கொள்கின்றனர் என்பது மிகவும் வருந்தத்தக்க விடயமே.

ஒரு இனத்தின் இருப்பை உறுதி செய்வது அவ்வினத்தின் பண்பாட்டுக் கூறுகளும் கலாசார அம்சங்களுமாகும். அவற்றை வெளிப்படுத்தும் வடிவமே மொழி. மனித வரலாற்றை வாழ்க்கைப் பதிவுகளை அடுத்த பரம்பரையினருக்கு கையளிப்பதன் ஊடாக பரம்பரையின் தொடர்ச்சி நிலை பெறுகின்றது.

எழுத்து மொழியை விட பேச்சு மொழியே இப்பணியை வினைத்திறனாக செய்கிறது. என்றாலும் கல்வி வளர்ச்சி, அறிவு பெருக்கம், பொது மொழி ஆற்றல், தொழில்நுட்ப விரிவாக்கம் போன்றன உலகமயமாதல் என்ற நிலைப்பாட்டை கொண்டுவந்து பண்டைய மொழி வழக்கு அழிந்து போனாலும் ஒரு இனத்தின் நிலைத் திருப்பிற்கு மிக முக்கியமான அம்சமாக மொழி பாதுகாக்கப்படல் அவசியமாகும். அந்த வகையில் மலையக தமிழ் மக்களின் இருப்பை வெளிக்காட்டும் மலையகத் தமிழரின் பேச்சுமொழியும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானதே.

### தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும்

மொழியின் தோற்றம் குறித்த ஆய்வுகள் இன்னும் நடந்த வண்ணமே உள்ளன. மொழி காலந்தோறும் மாறும் இயல்புடையது. ஒவ்வொரு காலகட்டத்திலும் மொழி எவ்வாறு அமைந்துள்ளது என விளக்கி, காலப்போக்கில் அம்மொழி அடைந்த வளர்ச்சியையும் மாற்றங்களையும் ஆய்வது மொழியியலின் ஒரு பிரிவு ஆகும். இது மொழி வரலாறு எனப்படுகிறது.

ஆட்டோ எஸ்பெர்சன், புளூம்பீல்டு, விட்னே, கால்டுவெல் முதலிய அயல் நாட்டாரும் ஏராளமான தமிழறிஞர்களும் மொழி குறித்த ஆய்வுகள் மேற்கொண்டனர். மொழியைப் பற்றி விரிவாக எழுதப் புகுந்த எஸ் பெர்ஸன் அவர்கள்.

"மனிதன் முதலில் தான் கண்ட பொருளுக்கு பெயர் வைக்கத் தெரியாத விலங்கு நிலையில் இருந்தான். தன் இனத்தவருடன் பேச இயலாதவனாக இருந்தான். பின்னர் நாளடைவில் அறிவையும் அனுபவத்தையும் பிறரிடம் சொல்வதற்காக அப்பொருளின் உருவத்தினைச் சித்தரித்துக் காட்டினான். அதன் பிறகு பொருளின் பண்புகளை தன் செய்கையால் அறிவித்து அதனைப் பெற்று வந்தான். மூன்றாவதாக குறுக்கெழுத்துப் போல ஒரு பொருளுக்கு ஒரு எழுத்து இட்டு வழங்கினான். அடுத்து எழுத முடியாமல் பேச்சு வகையால் சொற்றொடர்களைக் குறித்த அடையாளம் தந்தான். இங்ஙனம் மொழியானது உருப்பெறுகிறது என தம் அரிய ஆராய்ச்சி நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

ஒருவரே வீட்டு முற்றத்தில் இருந்த மரத்தில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.
(ம-7,30)

## சகோதரர்களுக்...

மதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களுக்கு இடையில் தர்க்கம் ஏற்பட்டு, கைகலப்பு ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில், இரு சகோதரர்களின் சண்டையை விலக்கி சமாதானப்படுத்த சகோதரி முயற்சித்துள்ளார்.

இதன்போது சகோதரன் ஒருவர் தனது சகோதரி மற்றும் சகோதரன் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

காயமடைந்த இருவரையும் அயலவர்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய சகோதரனை கைது செய்துள்ளனர்.(ம-7,33)

## தனியார்...

கள் இ.ம்.பிறாது என வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் சி.சிவபரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடுகையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பினையடுத்துயாழ்மாவட்ட தூர சேவைச் சங்கத்தின் பேருந்து உரிமையாளர்களும் ஏனைய மாவட்ட சங்கப் பிரதிநிதிகளும் நேற்றுக் காலை 8 மணிக்கு மின்சார நிலைய வீதித் தரிப்பிடத்திற்கு சென்றபோது, அமைச்சர் எமது தரிப்பிடம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சேவைகளுக்கு இடையூறாக இருப்பதாகவும் அதனால் சேவையில் ஈடுபடுவதற்காக நிற்கும் பேருந்துக்களை அவ்விடத்தில் தரித்து நிற்க வேண்டாம் என பொலிஸாரின் முன்னிலையில் கூறி அவ்விடத்திற்கு "No Parking" (வாகனங்கள் நிறுத்தக்கூடாது) என்ற அறிவிப்பு பலகையும் வைத்துள்ளனர்.

ஏற்கெனவே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஒத்துழைப்பின்மையால், குறுகிய அதாவது ஒரே நேரத்தில் 04 பேருந்துகளை மட்டும் தரித்து நிற்கக் கூடிய மின்சார நிலைய வீதித் தரிப்பிடத்தில் சேவையில் ஈடுபடும் நாம் தற்போது அமைச்சரின் அறிவுறுத்தலால் 02 பேருந்துகள் மட்டும் தரிக்கக் கூடிய தரிப்பு நிலையமாக உள்ளது.

இதனால் அவ்விடத்தில் இருந்து தூர சேவைகளுக்கான சேவைகளை ஆற்ற முடியாதுள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பேருந்துகள் தரித்து நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கட்டான இந்நிலையினை வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை எம்மிடம் இருந்து பணங்களை அறவிடுவதில் மட்டும் விளிப்பாக இருக்கின்றது.

நாம் மின்சார நிலைய வீதியில் சிறிய குறுகிய தரிப்பிடத்தில் இருந்து மிகக் கஷ்டமான சூழ்நிலையில் சேவையில் ஈடுபடுவதையும் எமக்கான தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளாது அசமந்தப் போக்கில் இருக்கின்றது.

இந் நிலையில் ஐந்து மாவட்டச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து மீண்டும் அமைச்சருடன் கலந்துரையாடி, எமது தரிப்பு நிலையத்தில் இருந்து சேவைகளை ஆற்ற முடியாத நிலையினை தெரிவிக்கும் முயற்சிகள் பலனளிக்காத காரணத்தினால், தூர சேவைகளுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைகளும், இலங்கை போக்குவரத்துச் சபையின் தூரசேவைகளும் புதிய தரிப்பிடத்தில் இணைந்து சேவைகளில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகும்வரை வடமாகாணத்திற்குள்ளான அனைத்து தனியார் போக்குவரத்து சேவைகளும் நடைபெறாது யாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் என்றார்.
(ம-7,33,60)

## எரிபொருள்...

கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர், விலைச் சூத்திரத்தில் அரசாங்கத்திற்கு கிடைக்கும் 4% தொகையைக் குறைத்து அந்த நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதாக தெரிவித்தார்.

பூஜ்ஜியத்திலிருந்து 4% வரை தொகையைக் குறைப்பதன் மூலம் செலவுகளை மட்டுமே ஈடுசெய்யும் வகையில் விலை சூத்திரத்தை செயற்படுத்த நாங்கள் எண்ணியுள்ளோம்.

கடந்த ஆண்டு விலைச் சூத்திரத்தை அமுல் படுத்தியதால் பழைய கடனை யும், வங்கிகளில் வாங்கிய கடனை யும் ஈடுகட்ட முடிந்தது.

இதன் பயனை மக்களுக்கு வழங்கு வதற்காக எதிர்காலத்தில் துரிதமாக செயற்படுவோம் என நம்புகின்றோம் எனத் தெரிவித்தார். (ம-7)

## இடைப்...

தேர்தல் செலவுகளை ஒழுங்கு படுத்தும் சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அதன் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் செலவுகளை ஒழுங்கு படுத்தும் சட்டம் குறித்து தெளிவுபடுத்துவதற்காக 40 அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தன.

ஐக்கியமக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, ... இரண்டாம் தலை... முறைக் கட்சி யின் தலைவர் உவிந்து விஜேவீர உள்ளிட்ட பல அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, தேர்தல்களை நடத்துவதற்கு நிதி சம்பந்தமாக காணப்பட்ட பிரச்சினை தற்போது இல்லாமல் போயுள்ளதாக தெரிவித்தார். (ம-7)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


### லக்கி 7 VIP
திகதி 2024.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 6229
X 1 9 6 3 4 2 X
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி - 2024.02.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1433
B 07 10 66 78 B
Double Chance 01476

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3645
சீட்டிழுப்பு திகதி 27.02.2024
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 06 15 22 29
D 24709
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 0712
கும்பம் 09 25 45 53 கும்பம்
17185 — 04

### மஹஜன சம்பத
திகதி 2024/02/27
சீட்டிழுப்பு இலக்கம் 5403
R 7 5 2 6 5 8
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
திகதி 27/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1751
O 04 13 14 19 41
11072

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2377 — வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.27 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 34 35 65 76 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,043,933.60
DLB

### சுபர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
27.02.2024 — வெற்றி வாரம் 111 — வர்ணம் சிவப்பு
Y 4 0 1 0 9 8 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,965,248.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா
திகதி 2024.02.27 — வெற்றி வாரம் 4538 — வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 06 19 22 70 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,173,747.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சசிரி
வெற்றி வாரம் 447 — திகதி 2024.02.27
வெற்றி இலக்கங்கள் 11 | 13 | 40
05
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,481,520/-
DLB

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4089 — வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.27 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 28 47 57 — மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,081,413.60
DLB

### ஜயோதய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 12 04 05 11 48
1553 — 27.02.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 508,579,978.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2203 — வர்ணம்: கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி: 2024 02 27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,540,788/-
ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 08 15 21 40 D
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல ஜோதிடர் குமாரசாமி யாழ் விஜயம்

திருமணத்தடை, மணவாழ்க்கையில் நிம்மதி இல்லையா? காதல், நோய், கல்வியில் மேன்மை இன்மை, தொழில் மேன்மை இன்மை அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் முன் அனுமதி பெற்று வரவும்

**077 877 8470**

இடம் : தெரேசா இன் (THERESA INN)
72, றக்கா வீதி, சுண்டுக்குளி

(19219)


## யாழ். பல்கலை...

கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்க கூட்டமைப்பின் 20.02.2024 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 28.02.2024 மற்றும் 29.02.2024 ஆகிய இரு தினங்களும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிற்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்படும்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வினை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும் அதேசமயம் 29.02.2024 வியாழக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் 28.02.2024 மற்றும் 29.02.2024 ஆகிய இரு தினங்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தினை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது.

அத்துடன் இன்று புதன்கிழமை காலை 11.00 மணியளவில், யாழ் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் முன்னெடுப்பது என்றும் நாளை வியாழக்கிழமை கொழும்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் நடைபெறவுள்ள கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் கலந்துகொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)


## விற்பனைக்கு

**Restaurant ஒன்றிற்கு தேவையான தளபாடங்கள்/உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.**

- Large Upright Chillers
- Food Chiller
- Salad Dispenser
- Large Fridge
- Bottle Cooler
- Deep Fryers
- Cookers
- Table
- Grinder
- Deep Freezers
- Large Gas Slinder
- Burger Plate With Cooker

**077 653 3221**

(19263)

## பெண் விற்பனையாளர் தேவை

எமது பிடவைக் கடைக்கு வியாபாரம் செய்வதற்கு ஏற்ற பழகிய, பழக ஆர்வம் உள்ள பெண் பணியாளர் தேவை.
நேரில் வரவும்.
சென்னை பெசன் வேல்ட்
இல.63, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(19299)

## பணிப்பெண் தேவை

கோண்டாவிலில் வீட்டில் தங்கியிருந்து பணியாற்ற பணிப்பெண் தேவை

**075 910 1101**

(19290)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19236)

**076 825 7716** (ஆகாஸ்)

இன்மையில் பட்டம்பெற்ற ஆரம்பக் கல்விப்பிரிவு ஆசிரியைகளை

## பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி
பாமினி கோணேஸ்வரன்
கல்விமாணி பட்டக்காரை



திருமதி
பிரதீபா கௌசிதரன்
கல்விமாணி பட்டக்காரை

வாழ்த்துவோர் :- ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஆவரங்கால் மகாயன வித்தியாலயம்

(19293)

## மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு இந்து கௌரவ குடும்பம் அரச தொழில் புரிந்து தற்பொழுது லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
தரகர் தேவையில்லை.

**076 63 63 028**

(19249)

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் Mardne Wealth பனிக்கட்டி தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை.
தங்குமிடம், உணவு வசதி உண்டு.

**077 301 4542**
**021 205 5555**

(19028)

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp
0044 7578 626565
077 251 9150
Email add: rajasasikumar@gmail.com

(19217)

## காணி வீடு விற்பனைக்கு

மானிப்பாய் நகரில் இருந்து 300மீற்றர் தூரத்தில் 1பரப்புக் காணி, வீடு வளவு
விலை பேசித் தீர்மானிக்கலாம்
தரகர் தேவை இல்லை

**077 809 3293**
**076 270 2176**

(19296)

## மாப்பிள்ளை தேவை

புங்குடுதீவு, இந்து, கௌரவ குலம், 1996, விசாகம் M.Sc, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

நீர்வேலி - தாவடி, இந்து, கௌரவ குலம், 1993, பூராடம், Charted Management, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

ஊரெழு - கொக்குவில் இந்து, கௌரவ குலம், 1985, பூரட்டாதி Bachelor, Accountant Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

வேலணை, இந்து, கௌரவ குலம், 1993, மகம் LLB Lawyer, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

வட்டுக்கோட்டை, இந்து, கௌரவ குலம், 1984, புனர்பூசம், Business Managment UK Citizen Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

ஆனைக்கோட்டை - நல்லூர், இந்து, கௌரவ குலம், 1995, ரோகிணி Graduate Norway Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

திருநெல்வேலி, இந்து, கௌர வகுலம், 1997, கார்த்திகை, Phd, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

உரும்பிராய், இந்து, கௌரவ குலம், 1993, திருவோணம், B.Sc Masters கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

கட்டுவன், இந்து, கௌரவ குலம், 1980, பரணி, Graduate Divorce Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

வேலணை - புங்குடுதீவு, இந்து, கௌரவ குலம், 1992, பூசம், ACCA, Accountant UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(19288)

தொ.இல. : **077 539 3728**
Whatsapp : **077 803 8193**

உ
சிவமயம்

## தென்மராட்சி ஆலயங்களில் திருநெறி விளக்கப்பிரசங்கங்கள்

ஆலய அறங்காவலர்கள்
பரிபாலனசபையினர்
வழிபடுவோர் சங்கத்தினர்
கவனத்துக்கு

- ஆத்ம விசாரத்தினை வலியுறுத்தும் நிகழ்வுகள்

சி .ஜெயகணேஷன்
ஓய்வு நிலை ஆசிரியர்

தனிப்பட்ட விலாசம்
14/5A, பழைய பொலிஸ் நிலைய வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

**076 046 0569**

(C-8427)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8425)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
**0777068777**

(C-8425)

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
**077 544 8503**

(19118)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org